**தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறுகமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) சமுர்த்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரி கூற்றுக்களுடன் இணங்கியிருக்க வேண்டிய போதிலும் 23 செலவு விடயங்கள் திறைசேரி பொறுப்புக்கள் கூற்றை விட ரூபா 774,536,663 ஆல் குறைத்தும் 06 செலவு விடயங்கள் திறைசேரி பொறுப்புக்கள் கூற்றைவிட ரூபா 2,375,954,824 ஆல் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரி கூற்றுக்களுடன் இணங்கியிருக்க வேண்டியதுடன் அறிக்கையிடப்படாத எதுவித கடப்பாடும் அல்லது பொறுப்பும் முன்னைய ஆண்டிற்கான செலவாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு அறிக்கையிட்ட பொறுப்புக்கள் அறிக்கையை திருத்தம் செய்ய முடியாததனால் இத்தவறு உருவாகியுள்ளது. |

## 1.6.2 நிதிசெயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சமுர்த்தி வங்கியினால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் அனுப்பப்பட்ட மிகுதி நிவாரணப் பணத்தை செலவுப் பேரேட்டிற்கு மிகைக் கட்டணமிடாது ரூபா 8,835,284 தொகை வருமானத்திற்கும் ரூபா 638,150 தொகை பொது வைப்புக் கணக்கிற்கும் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளப் பெற்றுக்கொள்ளப்பட்ட மிகுதி நிவாரணப் பணத்திற்குரிய இரண்டு நிதியங்களுக்கு மற்றும் கட்டாய சேமிப்புக்களுக்கு மிகையாக செலவு வைக்கப்பட்ட பங்களிப்பு பணத்தை மீளப் பெற்று திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் உள்ளபடியான நிவாரணச் செலவுகளுக்காக தேவையான செம்மையாக்கல்களைச் செய்து சரி செய்து திறைசேரிக்கு அறிக்கையிடுதல் வேண்டும். | மிகைக் கட்டணமிட்ட மற்றும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட நிவாரணப் பணத்தின் பெறுமதிக்குரிய கட்டாய சேமிப்புக்கள், வீடமைப்பு லொத்தர் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணத்திற்குரிய பெறுமதிகளை கணக்குகளில் செம்மையாக்கும் வேலைத்திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படும். |
| (ஆ) ஏனைய மூலதன செலவு விடயங்களின் கீழ் கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகங்களின் மூலம் முறையே ரூபா 42,850 மற்றும் ரூபா 4,200 வீதம் செலவு செய்து ரூபா 47,050 மொத்த தொகை ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் மூலம் மேற்கொண்ட செலவுகளாக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்ததனால் அக் கணக்கு மீதி ரூபா 47,050 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் மூலம் மேற்கொண்ட செலவுகளை சரியாக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கிற்கு செம்மையாக்குதல் வேண்டும். | திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட செலவுகளாக செலவுப் பேரேட்டில் உள்ளடக்குவதன் மூலம் இடம் பெற்ற இத்தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களின் மீளாய்வு நடவடிக்கைகள் 2019 ஏப்ரல் 17 ஆந் திகதி வரையும் முடிவுறுத்தப்படாததனால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,351,849,351 தொகையான சொத்துக்களின் பெறுமதி பௌதீகரீதியாக உறுதிப்படுத்தப்படாதிருந்தது டன் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 675,257,516 ஆகவும் திறைசேரியின் அரசாங்க நிதி திணைக்களம் பேணப்பட்டு வந்த அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 619,850 ஆகவும் காட்டப்பட்டிருந்தது. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்களின் மீளாய்வு நடவடிக்கை மேற்கொண்டு கணக்கீடு செய்யப்பட்ட நிதியற்ற சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்ததுடன் திணைக்களத்தின் அனைத்து சொத்துக்களும் சரியாக ஏடுகளில் பதிந்து கணக்கீடு செய்யப்பட்டு திறைசேரிக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். | சொத்துக்களின் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமை சம்பந்தமாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. சிகாஸ் இணையதள உருவாக்கத்தினூடாக நிர்ணயிக்கப்பட்டவாறு தரவுகள் உருவாக்கப்பட்டிருக்காமையால் திறைசேரி ஏடுகளில் ஏற்பட்டுள்ள தவறை சரி செய்து திறைசேரிக்கு மொத்த சொத்துக்களின் பெறுமதி அறிக்கையிடப் பட்டுள்ளது. |
| (ஆ) | வாழ்வாதார அபிவிருத்தி செலவு விடயங்களின் கீழ் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 102,766,000 மற்றும் ரூபா 6,140,126 தொகைகளான நிலையான சொத்துக்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டு நிதிக்கூற்றிக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தேவையான ஏற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களில் கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் முற்பணங்கள் கொடுப்பனவுகள் ரூபா 219,920,079 ஆக இருந்தும் அதனை ரூபா 204,745,258 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கியதனால் நிதி செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 1,986,925,054 பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்தபடவில்லை. | சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றங்கள் இது தொடர்பாக தாக்கமளித்துள்ளது. |

### 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்க கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஒய்வு பெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட சேவையை கைவிட்டுச் சென்ற 168 உத்தியோகத்தர்களின் 03 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 3,107,329 ஆகும். | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1 மற்றும் 3 ஆம் பந்திகளின் பிரகாரம் மற்றும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | ஓய்வு பெறுதல் கோவைகளைத் தயாரித்தல், திணைக்களம் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்தல் முதலிய செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு முடியுமெனவும் குறித்த காலத்தை குறிப்பிட முடியாது எனவும் வேலையிலிருந்து இடை நிறத்தி வைக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் தொடர்புபட்ட விடயங்களை விசாரித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.6 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளின் போது இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டது எனக் குறிப்பிட்ட ரூபா 607,109 பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏடுகளைப் பரீட்சித்துப் பார்த்து தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். | மேலும் பரீட்சித்துப் பார்த்து 2019 ஆம் ஆண்டிற்குள் உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியாது விட்டால் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சமுர்த்தி வங்கி முகாமைத்துவம் மற்றும் செயற்பாடுகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட நுண்பாக நிதி வங்கி பிரிவின் கொடுக்கல் வாங்கல்களை பொது வைப்புக் கணக்கின் மூலம் மேற்கொள்வதற்கு திறைசேரியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், அப்பிரிவில் கொடுக்கல் வாங்கல்கல்களை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதி வைப்புக்கள் ரூபா 20.11 மில்லியன் தொகையானது நிதி நிலைமை தொடர்பான கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரமின்றி கொடுக்கல் வாங்கல்களுக்காக பொது வைப்புக் கணக்கைப் பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். | நிதிக் கட்டுப்பாட்டின் வெளிப்படைத்தன்மை மற்றும் இரட்டைக் கணிப்பைத் தவிர்ப்பதற்காக வங்கி தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள அனைத்து மீண்டு வரும் மற்றும் மூலதனத் தன்மையான செலவுகள் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | பயிற்சி நிலையங்களிலிருந்தான உழைப்புக்கள் ரூபா 5,485,555 மற்றும் இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டை பணமாக மாற்றுதல் ரூபா 2,191,162 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2 மற்றும் 3 ஆம் பிரிவுகளுக்கு இணங்க அரசியலமைப்பின் 149 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக சட்டத்தால் ஒதுக்கீடு செய்யப்படாத | நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் தெற்கு அபிவிருத்தி நிதிக் கம்பனியின் ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டை பணமாக மாற்றுதல் ரூபா 2,191,162 தொகை நிறுத்தி வைக்கப்பட்டது. எனவும் பயிற்சி நிலையத்தின் உழைப்புக்களிலிருந்து நிறுத்தி வைத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | அனைத்து பெறுவனவுகளும் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். | நிருவாகச் செலவுகளை மேற்கொள்வதற்காக எனவும் தெரிவிக்கிறேன். |
| (ஈ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து சேமிக்கப்பட்டு மீளத்திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,137,117 மொத்த தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியளவில் உள்ளபடியான செலவுகளை இனங்கண்டு திறைசேரிக்கு கட்டுநிதிகளை சரியாக தீர்த்து வைத்தல் வேண்டும். | 2019 மே மாதத்தின் போது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.7 பதிவேடுகள், மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சொத்துக்களை திணைக்களத்திற்குப் பொறுப்பேற்றதன் பின்னர் பதிவேடுகளில் உள்ளடக்கி சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாக்கப்படும். |
| **(ஆ)** | **வாகனங்களை பட்டியல்படுத்தும் பதிவேடு** | | |
| | வாகனங்களின் பட்டியல்படுத்தும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்களின் பட்டியற்படுத்தப்பட்ட பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | வாகனங்களின் விபரங்களை உள்ளடக்கி பேணப்படுகின்ற பதிவேட்டை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| **(இ) சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| சேதங்கள் தொடர்பான பதிவேடு அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி நாளது வரையாக பேணப்படுதல் வேண்டும். | சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.8 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் நிதி கட்டுப்பாட்டிற்காக விளைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் விளைதிறன் தொடர்பாக ஏற்கனவே மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை விளைதிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அம் மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பபிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் உரிய மீளாய்வினை மேற்கொண்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக கால தாமதமின்றி பதில் வழங்கும் உள்ளக வேலைத்திட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம் பெறுகின்றது. என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **இணக்கமின்மைகள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 5 (ஊ) பிரிவு | திவிநெகும சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் திவிநெகும பிராந்திய அமைப்புக்கள் திவிநெகும மாவட்ட குழு,திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிச் சங்கம் என்பவற்றை கணக்காய்வு செய்வதற்கு முடியுமான வகையில் அதிகாரச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. | உரிய சங்கம் மற்றும் அமைப்புக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்வதற்கு முடியுமான வகையில் நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட்டு அதிகாரச் சட்டம் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். | ஒரு வெளிவாரி கணக்காய்வு நிறுவனத்தை தெரிவு செய்து கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ii) | 36 மற்றும் 37 ஆம் பிரிவுகள் | சமுர்த்தி அபிவிருத்தி நிதியம் மற்றும் சமுர்த்தி சுழற்சி நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவின் பிரகாரம் உரிய நிதியத்தை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சமுர்த்தி அபிவிருத்தி நிதியை தோற்றுவிப்பதற்காக அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2003 இன் 17 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் திருத்திய அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு | 21 அமைய ஊழியர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்திருக்காததுடன் அவர்களுக்காக 2018 ஆம் ஆண்டில் அந் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாத பணம் ரூபா 468,727 ஆகும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அமைய ஊழியர்கள் அரசாங்க சேவை சேமலாபத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். | இந்த உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் போது பங்களிப்பு தொடர்பாக குறிப்பிடப்படாத தவறு காரணமாக ஏற்பட்டுள்ள இந் நிலையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>-----------------------------------<br>நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 1647(அ) | திணைக்களத்தின் 140 வாகனங்கள் சம்பந்தமான மீளாய்வு திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திணைக்களத்தின் வாகனங்கள் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். | வாகனங்கள் தொடர்பான மீளாய்வினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |
| (ஈ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை<br>----------------------------------- | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 140 வாகனங்களில் 126 வாகனங்களுக்காக எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் சம்பந்தமாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படுதல் வேண்டும். | அனைத்து வாகனங்களின் எரிபொருள் நுகர்வைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | திணைகளத்தின் 28 வாகனங்களைத் தவிர்த்து மிகுதியான வாகனங்களுக்காக பெயர்களும் அரசாங்க இலச்சினைகளும் | அனைத்து வாகனங்களுக்குமாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தி | திணைக்களத்தின் அனைத்து வாகனங்களுக்குமாக திணைக்களத்தின் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினையைப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறிக்கப்பட்டிருக்க வில்லை. | ன் பெயர்களும் அரசாங்க இலச்சினையும் பொறிக்கப்படுதல் வேண்டும். | பொறிப்பதற்காக பெறுகை நடைமுறையைப் பின்பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருததி லொத்தர் நிதியம், வங்கி சங்கங்கள், எழுது கருவிகள் சுழற்சி நிதியம் ஆகிய நிதியங்களை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தில் பேணப்பட்டு வந்த நிதியம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியதிச்சட்ட நிதியமாக மாற்றுதல் வேண்டும். | சமுர்த்தி அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் இந் நிதியங்களை பேணுவதற்கு அதிகாரம் காணப்படுகின்றது. |

**1.6.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**(அ) அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு உதவியளிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள திவிநெகும (சமுர்த்தி) தேசிய சபைக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு மற்றும் அதன் செயலாளர்களுக்கு படிகள் கொடுப்பனவு செய்வதற்கு பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அச் சபையின் 11 அங்கத்தவர்களுக்கு 2014 ஆம் ஆண்டின் யூலை மாதத்திலிருந்து 2018 திசெம்பர் மாதம் வரை 41 சபைக் கூட்டங்களுக்கு பங்குபற்றியமைக்காக ஒரு சபைக் கூட்டத்திற்கு ரூபா 6,000 வீதம் ரூபா 1,787,000 மொத்த தொகை மற்றும் சபையின் செயலாளருக்கு ஒரு சபைக் கூட்டத்திற்கு ரூபா 5,000 வீதம் 2017 மார்ச் மாதத்திலிருந்து 2018 மார்ச் மாதம் வரை 13 சபைக் கூட்டங்களுக்கு ரூபா 65,000 தொகையுமாக படிகள் | முறையான அங்கீகாரமின்றி படிகளைப் பெற்றுக் கொள்ளலாகாது | அரசாங்க கூட்டுத்தாபனம், சபையின் பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்குச் சமனான கடமைகள் திவிநெகும தேசிய சபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் பிரதான கணக்காளரின் சிபார்சு மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பேரில் அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேசிய சபையின் அங்கத்தவர்களுக்கு படிகள் செலுத்தப்படுகின்றது எனவும் மற்றும் |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தன. | | வழக்கமான கடமை நேரங்களுக்குப் புறம்பாக குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுவதனால் தேசிய சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேசிய சபையின் செயலாளருக்கு படிகள் செலுத்தப்படுகின்றது. |

**(ஆ) மோசடித்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 – 2018 காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட கண்டி மாவட்ட செயலகத்தின் ரூபா 23,406,847 தொகையான நிதி மோசடிகள், 06 சமூக அடிப்படையிலான வங்கிகளின் ரூபா 4,136,984 தொகையான நிவாரணப் பணத்தை மோசடி செய்தல், மற்றும் சமுர்த்தி நலனாளிகளை வலுப்படுத்தும். வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக 03 சந்தர்ப்பங்களின் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 6,513,220 மோசடி என்பனவாக ரூபா 34,057,051 மொத்த தொகையான நிதி மோசடிகளின் பரீசீலனை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை. இரண்டு மோசடிகளிலிருந்து அறவிடப்பட்ட பணம் ரூபா 1,520,000 அல்லது 4.5 சதவீதம் மாத்திரமாகும். | முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு அனைத்து நிதி மோசடிகளினதும் பரீசீலனை நடவடிக்கைகளை மிக விரைவாக முடிவுறுத்தி அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டங்களை அறவீடு செய்ய வேண்டுமெனவும் பிழைகளையும் மோசடிகளையும் தவிர்க்கும் வகையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தோற்றுவிக்கப் படுதல் வேண்டும். | கண்டி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றுள்ள மோசடிகளில் தற்பொழுது ரூபா 2,500,000 அறவீடு செய்யப்பட்டு நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் நிவாரணப் பண மோசடியும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான மோசடிகளிலிருந்தும் ரூபா 6,923,300 அறவீடு செய்யப்பட்டுள்ளன எனவும் பரிசீலனை நடவடிக்கைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிற்போடப்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கிறேன். |
| (ii) | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக 6 வங்கி வலயங்களின் சமுர்த்தி நிவாரணம் மற்றும் | முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு அனைத்து நிதி மோசடிகள், ஒழுக்க | பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . |

| | |
|---|---|
| வாழ்வாதார நலன்களை வழங்குதல், உத்தியோகத்தர்களை பல வந்தப்படுத்தி 2017 சர்வதேச புகைத்தல் மற்றும் மதுபான எதிர்ப்பு கொடி தினத்திற்காக பணம் சேகரித்தல், சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நலன்களை தவறான வகையில் வழங்குதல், 2 சமுர்த்தி வங்கிகள் தீப்பிடித்தல், நலன்பெறுநர்களுக்கு கடன் வழங்கும் தன்மையில் போலி ஆவணங்களைத் தயாரித்து சமூர்த்தி வங்கிகளிலிருந்து ரூபா 3,082,999 தொகை மோசடி செய்தல் போன்ற வகையில் வெளிப்படுத்தப்பட்ட 12 ஒழுங்கீனங்கள் மற்றும் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டதாக, வெளிப்படுத்தப்பட்ட ஒழுக்க மீறல்கள் மற்றும் குற்றங்கள் சம்பந்தமான 107 தவறுகளைப் பரீட்சிக்கும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | மீறல்கள், குற்றங்கள் சம்பந்தமான பரிசீலனை நடவடிக்கைகளை முடியுமான அளவு விரைவாக முடிவுறுத்தி அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டுமென்பதுடன் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தவிர்க்கும் வகையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்க வேண்டும். கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை முறையாக ஆய்வு செய்து அதற்காக சரியான பதில்களை வழங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மிகை நிதி ஏற்பாடுகள் வழங்குதல் | | |
| (i) | 02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்ட ரூபா 1,287,500 நிதி ஏற்பாட்டில் ரூபா 356,702 அல்லது 27.7 சதவீதம் | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் வகையில் வருடாந்த செலவு | செலவு விடயங்களுக்கிடையே செலவுகள் மாற்றப்பட்டு அறிக்கையிடப் பட்டிருந்தமை இதற்கான காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மேலும் ஒரு செலவு விடயத்தில் சேமிப்பு காணப்பட்டிருந்தும் மாற்றப்பட்ட ரூபா 180,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | இருந்தது. |
| (ii) | 03 மூலதன மற்றும் மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 530,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் எதுவித பயன்பாடுமின்றி சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் வகையில் வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | இவ்வாறான பிழைகளைத் தவிர்ப்பதற்காக முறையான வேலைத்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 9 மில்லியனுக்கு மேலதிகமாக சமுர்த்தி நலன் பெறுனர்களை வலுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 55 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 26.29 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிக நிதி ஏற்பாடுகளைப் ஒதுக்கீடு செய்யும் போது போதியளவு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு விளைவற்றிருந்தமை<br>---------------------------------------------- | | |
| | 08 மூலதன செலவு விடயங்களின் ரூபா 2,026.90 மில்லியன் தேறிய நிதி ஏற்பாட்டில் பயன்பாடு ரூபா 1,086.87 மில்லியன் அல்லது 53.6 சதவீதமாக இருந்ததுடன் அந்த செலவு விடயங்களின் சேமிப்பு 13 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவில் காணப்பட்டது. மேலும் 09 மீண்டு வரும் செலவு விடயங்களின் ரூபா 1,162.10 மில்லியன் தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 629.56 மில்லியன் சேமிப்பும் அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் வகையில் வருடாந்த செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். | சம்பள பரிமாற்றம் முறையான மற்றும் பொதுவான நடைமுறையில் இடம் பெற்றறிருக்காமை 02 செலவு விடயங்கள் மாற்றப்பட்டமை, அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குதல், திறைசேரி கட்டு நிதிகள் கிடைக்காமை, செலவு விடயங்களுக்கிடையே செலவுகளை அறிக்கையிடும் தவறுகள் முன்னைய திட்டங்கள் முறையான மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்படாமை முதலியன நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்கு காரணமாக இருந்தது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணக்கமின்றி 11 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 284.06 மில்லியன் நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 48.29 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்துதல் வேண்டும். | செலவுகளை மேற்கொள்ளும் பொறுப்புக்களுக்கு கட்டுப்படுகின்ற தரப்பினர்களால் சரியாக முன்னறியப்படாமை இதற்கான காரணமாக இருந்தது. |
| (ஆ) பணிக்கொடை கொடுப்பனவுகள் தாமதித்ததன் காரணமாக கணிக்கப்பட்ட 30 சதவீத மிகைக் கட்டணத்தில் மீளாய்வாண்டின் இறுதியளவில் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 843.16 மில்லியனை உள்ளடக்கி இழப்பீடும் பணிக்கொடைப் பொறப்புக்களும் ரூபா 3,057.26 மில்லியனாக இருந்த போதிலும் அது ரூபா 26.81 மில்லியன் குறைத்து பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அங்கீகரித்த எல்லைக்குள் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குதல் வேண்டும். | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பெற்ற மொத்த நிதி ஏற்பாட்டையம் செலவாகக் கருதி பொறுப்புக்கள் அறிக்கை தயாரிக்கப்பட்டதன் காரணமாக பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

### 2.3 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தல்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நிமித்த உப கட்டுநிதிகளானவை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 21 உத்தியோகத்தர்களுக்கு 57 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,304,994 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் 10 நாட்களிலிருந்து 03 | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடுகள் பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் செயல் நிமித்த உப கட்டு நிதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வவுச்சர்களை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் நிதி வரம்புகள் தொடர்பாக உத்தியோகத்தர்களின் அறிவின்மை, நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரத்தை ஒப்படைக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்கள் வரையான வீச்சுடைய கால தாமத்தில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | | நிகழ்காலத்தில் முற்பணங்களைத் தீர்த்து வைப்பது சம்பந்தமான ஒழுங்கு விதிகளை தீவிரமாக பின்பற்றுவது சம்பந்தமாக உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | முறையாக முன்னறிந்து கொள்ளப்படாது செயல் நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கியதன் காரணமாக 04 உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,066,540 மொத்த தொகையான முற்பணங்களில் ரூபா 540,269 மிகுதியாக இருந்தமை பின்னர் பணமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. அந்த மிகுதிப்பணமானது வழங்கப்பட்ட உப கட்டு நிதியில் 29 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையான வீச்சுடைய அளவாக இருந்தது. | முறையான ஒரு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு செயல் நிமித்த உப கட்டு நிதி வழங்கப்படுதல் வேண்டும். | மிகை மதிப்பீடு செய்தலை தவிர்க்கும் உள்ளக நடைமுறையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் கணக்கு வைத்தலில் உள்ள ஒரு தவறு என திணைக்களம் இனங்கண்ட ரூபா 2,950,975 மொத்த தொகையான இரண்டு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தேறப்படாத வைப்புக்களாக வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்கு வைத்தல் தவறை சரியாக இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். | 2016 மார்ச் மாதம் நிலுவையான நிவாரணப் பணத்தை நேரடியாக அனுப்பிவைத்தல் காசேட்டில் பதியப்படாததன் காரணமாக தேறப்படாத வைப்புக்களாக வங்கி கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதனை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு 16 | வங்கியில் நேரடியாக செலவு வைத்தல்கள் | நேரடி செலவு வைத்தல்களை இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களின் போது நேரடியாகச் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,487,472 பணத்தை ஏடுகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வங்கி கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அந்த மாதத்திலேயே காசேட்டில் செம்மையாக்கி சரியாக கட்டுநிதியை தீர்த்து வைத்தல் வேண்டும். | உத்தியோகபூர்வ கணக்கிற்கு செம்மையாக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கும் செயற்பணியும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1995 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வறுமையை ஒழித்து சமூகத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் உறுதியான வரையறைகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், சமுர்த்தி நலன்பெறுநர்களை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் தோற்றுவிக்கப்பட்ட 1,074 சமூக அடிப்படையிலான வங்கி முறைமைகள் அக்குறிக்கோளுக்கு முரணாக இலாபம் உழைப்பதனை குறிக்கோளாகக் கொண்டிருந்தன. எவ்வாறாயினும், 2013 இலிருந்து 2018 வரையான 06 ஆண்டுகள் காலப்பகுதியில் அரசாங்கத்தின் சமுர்த்தி நிவாரணச் செலவுகள் ரூபா 190,193.53 மில்லியன் தொகையும் சமுர்த்தி அபிவிருத்திச் செலவுகள் ரூபா 6,752.10 மில்லியன் தொகையுமாக இருந்தது. | வறுமையை ஒழித்து சமூகத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் உறுதியான வரையறைகளை இனங்கண்டு தேசிய கொள்கையை தயாரித்து இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சமுர்த்தி நலன் பெறுநர்களை வலுப்படுத்தும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக சமுர்த்தி வங்கி முறைமையை ஆரம்பித்து வைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களும் கடன் நிகழ்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. |

### 3.2 திட்டமிடல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு ரூபா 2,000 மில்லியனால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி | 2019 அபிவிருத்தி திட்டத்திற்கு உரிய அறிக்கைகளை உள்ளடக்குவதற்கு |

| | | |
|---|---|---|
| வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் கொள்கைகள் மற்றும் முகாமைத்துவத்திற்குரிய விடயங்கள் சம்பந்தமாக உதவியளிப்பதற்காக 11 அங்கத்தவர்களை உள்ளடக்கிய திவிநெகும (சமுர்த்தி) தேசிய சபை தோற்றுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது 06 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சமுர்த்தி நலன்பெறுநர்களை வலுப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரையறைகள் இனங்காணப்பட்டு கொள்கைகள் தோற்றுவிக்கப்படாததுடன் எடுக்கப்பட்ட பல தீர்மானங்கள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும (சமுர்த்தி) அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் திவிநெகும (சமுர்த்தி) நிகழ்ச்சித்திட்டங்களின் கொள்கைகள் மற்றும் முகாமைத்துவத்திற்குரிய விடயங்கள் சம்பந்தமாக திணைக்களத்திற்கு உதவியளித்தலை முறையாக நிறைவேற்றுதல் வேண்டும். | குறிப்பான கருத்துரை தரப்படவில்லை. 2016 - 2017 ஆம் ஆண்டுகளின் போது 06 வரையறைகளினூடாக நிவாரணங்களைப் பெற வேண்டிய குடும்பங்களை இனங்காண்பதற்காக மேற்கொண்ட மீளாய்வில் 450,959 குடும்பங்கள் வலுப்படுத்தப் பட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டிருந்த போதிலும், அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் 2002 இன் 24 ஆம் இலக்க சமூக நலன்புரி அதிகாரச்சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட சமூக நலன்புரி சபையினால் வலுப்படுத்தப்பட்ட குடும்பங்களை இனங்காண்பதற்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பொது வரையறைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தேசிக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சமுர்த்தி நலன்பெறுநர்களை வலுப்படுத்தும் 12 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000 மில்லியன் நிதிஏற்பாட்டில் ரூபா 927.81 மில்லியன் அல்லது 46.4 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | சமுர்த்தி நலன் பெறுநர்களை வலுப்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை முறையாக பயன்படுத்துதல் வேண்டும். | |
| (i) | வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 400 மில்லியன் நிதிஏற்பாட்டில் பயன்படுத்தப்படாத அளவு ரூா 334.70 மில்லியன் அல்லது 83.7 சதவீதமாகும். | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் முறைப்படி அமுல்படுத்தப்படுதல் வேண்டும். | அமைச்சின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பயன்பாடு ரூபா 94.46 மில்லியனாகும். |
| (ii) | திட்டமிடப்பட்ட 68 செயற்பாடுகளில் 17 செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதற்கான நிதிஏற்பாடு ரூபா 136.8 மில்லியனாகும். மேலும், 38 செயற்பாடுகளின் கீழ் 2,057,161 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,229.42 மில்லியன் நிதிஏற்பாட்டில் ரூபா 562.14 மில்லியனுக்குரிய 1,911,250 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் அவ்வாறு மிகுதியாகவுள்ள நிதிஏற்பாடு 45.7 சதவீதமாகும். | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முறையாக அமுல்படுத்துதல் வேண்டும். | திறைசேரியிடமிருந்து போதியளவில் கட்டுநிதி கிடைக்காமை, கொள்வனவு செய்தல் மற்றும் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல் தாமதமடைதல், அடிக்கடி பணிப்பாளர் நாயகம் மாற்றப்படுதல் என்பன தாக்கமளித்துள்ளன. |
| (iii) | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் நாடு முழுவதிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் இனங்காணப்படாது 04 | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு மற்றும் நிதிஏற்பாடு வழங்கப்பட்ட குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்கு செலவு செய்யப்படுதல் | 2018 ஆம் ஆண்டில் தொடக்க செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களுக்குமாக |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டங்களில் 04 வீதிகள் மற்றும் அங்கெலிபிடிய நீர் திட்டமுறைக்கமையை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 43.07 மில்லியனில் ரூபா 4.44 மில்லியன் செலவு செய்து 03 மாவட்டங்களில் 03 வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. | வேண்டும். | ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | சமூக நலன்புரிப் பிரிவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 10 மில்லியனில் அச்செயற்பாடுகளை நிறைவேற்றாது 02 மாவட்டங்கள் புதிய சமுர்த்தி நிவாரணங்களை வழங்கும் விழா நடவடிக்கைகள் மற்றும் உல்லாச பயணங்களுக்காக ரூபா 15.69 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொலன்னறுவை மாவட்டத்தில் புதிய சமுர்த்தி நலனாளிகளுக்காக உரிமைச் சான்றிதழ் வழங்கும் விழாவின் வைபவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துமாறு கிடைத்த ஆலோசனையின் பேரில் செயற்படும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டங்களைத் திருத்தம் செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (இ) | தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவனத்தின் குறிக்கோள்களினை நிறைவேற்றுவதற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 33.9 மில்லியன் செலவு செய்து 3 மொடியூல்களுடன் ஈ-சமுர்த்தி செயற்திட்டம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அவற்றில் மனித வளங்கள் முகாமைத்துவ மொடியூல் (HRM) மற்றும் நலன் பெறுநர் முகாமைத்துவ மொடியூல் (CRM) முறையாக அமுல்படுத்தப்படாமையும் நலன்பெறுநர்களின் செயற்திட்ட தகவல்களை ஊக்குவிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்திட்ட முகாமைத்துவ மொடியூல் (PPM) | திணைக்களத்தின் செயலாற்றலை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவருவதற்கான தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தி செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இந்த மொடியூலை அமுல்படுத்துவதற்காக 2015 - 2018 ஆம் ஆண்டுகளின் போது செயல்நடவடிக்கைத் திட்டங்களின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அமைச்சர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் அடிக்கடி மாற்றப்படுவதன் அடிப்படையில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்கள் உருவாகியிருந்ததனால் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்க வில்லை |

| | | |
|---|---|---|
| செயற்பாடற்றுக் காணப்பட்டதன் காரணமாக எதிர்பார்த்த குறிக்கோள் முறைப்படியாக நிறைவேற்றப் பட்டிருக்காததுடன் இந்த மொடியூலை மேம்படுத்துவதற்காக 2015-2018 காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 21 மில்லியன் முறைப்படியாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றலுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கையை ஒப்பீடு செய்த போது 08 செயற்பாடுகளின் நிதி செயல்முன்னேற்றத்தில் ரூபா 126.58 மில்லியனால் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையும் செயல் முன்னேற்ற அறிக்கையும் தயாரிக்கப்படுதல் வேண்டும். | மொத்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் மார்ச் மாத இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளபடியான செலவுகளின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டது. |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ), (இ), (ஈ), (உ) மற்றும் 4.2.2 வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைத் திட்டங்களும் பெறுகை கால அட்டவணையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை | 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 5,000 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முறையான நியமனக் கடிதங்களை வழங்கும் விழா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்குரிய 05 பெறுகைச் செயற்பாடுகள் ரூபா 5.4 மில்லியன் செலவு செய்து நடைமுறைப்படுத்தும் போது 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1, 6.2.2, 6.3.1(இ), 4.2, 6.3.3, 7.11.1 ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணப்படுகின்ற நிலைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைக்கப்பட்ட 4 நிறுவனங்களுக்குச் சொந்தமான 27 காணி மற்றும் கட்டிட ஆதனங்களும் 02 வாகனங்களும் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் அவற்றில் 23 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 118,987,414 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும (சமுர்த்தி) அதிகாரச்சட்டத்தின் 44(ஆ) பிரிவின் பிரகாரம் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்கின் அனைத்து அசையும் மற்றும் நிரந்தர ஆதனங்கள் தாமதமின்றி பொறுப்பேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | அந்த ஆதனங்களை பொறுப்பேற்றல் மற்றும் கைப்பற்றல் நடவடிக்கையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை தெற்கு அதிவேக அதிகாரசபையினால் 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 6 காணி மற்றும் கட்டிட ஆதனங்களின் குத்தகை உடன்படிக்கைகளை திருத்துதவ்றகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பழைய உடன்படிக்கையின் அடிப்படையில் மீளாய்வாண்டில் | திணைக்களத்தால் புதிய குத்தகை உடன்படிக்கைக்காக இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். | குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 6 ஆதனங்கள் சம்பந்தமாக கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் அவதானிப்புக்களில் குறிப்பிடப்படாத உடைந்த தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டுள்ள 2 ஆதனங்களை மீள ஒப்படைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 2,977,836 ஆகும். | | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கின்றேன். |

## 3.7 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். | ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளதுடன் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு சுற்றறிக்கை வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.8 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகிய லொறிக்கு ஏற்பட்ட ரூபா 668,325 நட்டத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட நட்டத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது தனிப்பட்ட பயணங்களின் போது விபத்துக்குள்ளான 2 வாகனங்களில் ஒரு வாகனத்திற்கு இழப்பீடாகக் கிடைக்கப்பட்ட ரூபா 2,000,000 பணம் 2018 திசெம்பர் 08 ஆந் திகதி ஒரு தனியார் கராஜிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வாகனத்தை திருத்தும் நடவடிக்கை கணக்காய்வுத் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. காப்புறுதி இழப்பீடு வழங்கப்பட்டிருக்காத மற்றைய | வாகனத்தை திருத்தம் செய்வது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆராய்ந்து பார்த்து விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வாகனத்தை திருத்தம் செய்யாது 03 ஆண்டுகளாக தனியார் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாத்தளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு வாகனம் சாரதியின் தவறினால் விபத்துக்குள்ளாகியமை சம்பந்தமான விசாரணைகளை முடிவுறுத்தி ரூபா 279,937 நட்டத்தை அறவீடு செய்வதற்கும் அதனை நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தை திருத்தம் செய்வது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நட்டத்தை ஏட்டில் பதிவு செய்து அறவீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டு அதிகாரசபைகளுக்குச் சொந்தமான 12 வாகனங்களைப் பொறுப்பேற்கும் போது அரைச் சொகுசு இரட்டைச் செயற்பாட்டு வரி ரூபா 527,500 செலுத்தாததன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 263,750 தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கடமைகள் தாமதித்தமை சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனங்களைப் பொறுப்பேற்கும் போது ஒருங்கிணைக்கப்பட்ட அதிகாரசபைகளின் மூலம் செலுத்தப்படாத வரிப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

### 3.9 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் தாமதம் 02 மாங்களிலிருந்து 01 ஆண்டு 03 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டது. அந்த ஐய வினாக்களில் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 74.01 | அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பதில்களைச் சமர்ப்பித்து உரிய சரிசெய்தல்களைச் செய்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு காலதாமதமின்றி பதில்களை வழங்கும் உள்ளக வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

மில்லியனாகும்.

### 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2015 - 2017 காலத்தில் ரூபா 107,535,031 செலவு செய்து நிவாரணம் பெறுவபர்களை மீள இனங்காணும் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகவல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் இரண்டிலும் 9250 குடும்பங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒக்தோபரிலிருந்து திசெம்பர் மாதம் வரை ரூபா 75,333,000 செலவு செய்து நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் சமூக நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்து நலன்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் நலன்பெறுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். |
| (ஆ) 2003 ஆம் ஆண்டிலிருந்து 2018 திசெம்பர் 31 வரை உத்தியோகத்தர்களால் மேற்கொண்ட 165 சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்கங்களின் பணமோசடிகள் ரூபா 123,802,063 சமுர்த்தி அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மோசடி ரூபா 5,200,500 புகையிலை மற்றும் மதுபான எதிர்ப்பு தின நிகழ்ச்சித்திட்டங்களின் பணமோசடி செய்தல் ரூபா 174,850 என்பனவாக ரூபா 142,677,413 மொத்த தொகையான மோசடிகள் சம்பந்தமாக விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் 16 மோசடிகளிலிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டது என அறிக்கையிடப்பட்ட பெறுமதி ரூபா 12,880,092 ஆகும். | தவறுகள் மற்றும் மோசடிகளை குறைக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை முறைமைப்படுத்த வேண்டியதுடன் விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கும் ஒழுக்காற்று நடைமுறைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நட்டத்தை அறவீடுசெய்து சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற ஒரு செழிப்புள்ள நாடக இலங்கையை மாற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளுக்கு இணங்க திணைக்களத்தினால் தனது குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு அவற்றை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதற்கிணங்க நிதிஏற்பாட்டை ஒதுக்கீடு செய்து நிறுவனத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் நிலைபேறான அிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க நிதிஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து வறுமையற்ற செழிப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 இலிருந்து 2021 வரையான காலத்திற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து அமைச்சிற்குச் சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் வறுமையை ஒழிக்கும் குறிக்கோளுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. |

## 5. நல்லாட்சி

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை முறையாக மீளாய்வு செய்யப்பட்டு குறைபாடுகள் மீண்டும் ஏற்பவதனைத் தவிர்க்கும் வகையில் தேவையான சரியான நடவடிக்கைகள் எடுக்காததனால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கலந்துரையாடப்படாத விடயங்கள் 2019 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் குழுவின் போது கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 27.189 மற்றும் 25,506ஆக இருந்ததுடன் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 12,206.20 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் மூன்று சேவைகளைத் தவிர்த்து மூன்று அதிகாரசபையிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட 1049 அங்கீகரித்த பதவியணியினருக்காக சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை விரைவுபடுத்தி நிருவாக சிக்கல்களைத் தீர்த்து வைத்தல் வேண்டும். | பதவியணியினரை அங்கீகரித்தல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்காமை இதற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) 2014 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான ஆண்டுகள் காலத்தின் போது கணக்கீட்டு உத்தியோகத்தராக 10 பணிப்பாளர் நாயகங்கள் குறுகிய காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தமை திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையுடன் திணைக்களத்தின் செயலாற்றலை மேம்படுத்துதல் வேண்டும். | 2015 சனவரியிலிருந்து 2018 திசெம்பர் வரையான காலத்தில் அமைச்சு மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் மாற்றப்பட்டதன் காரணமாக பணிப்பாளர் நாயகம் பதவியில் மாற்றமடைவதை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது. |